OS 400/2021

பி.வா.சா.1 மதன்குமார் த/பெ அண்ணாமலை

நாள் 25.08.2025

**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் 4 மற்றும் 5 பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியும். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போது வழக்கு சொத்தை 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். கிரையம் கொடுத்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. என் தகப்பனார் கிரையம் கொடுத்த ஆவணத்தில் வில்லங்கம் ஏற்பட்டால் அதை தீர்த்து வைப்பதாக விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு இந்த சொத்தை தவிர வேறு சொத்துகள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. என் தகப்பனார் வழக்கு சொத்துகள் சம்மந்தமாக ஆவணங்களை வைப்பீடு செய்து அடமானக் கடன் வாங்கியருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி அடமானம் நிலுவையில் இருக்கும்போதே 2013ம் வருடம் எனது தகப்பனார் வாதி வெங்கடேசனுக்கு அடமானம் எழுதி கொடுப்பதாக பி.வா.சா.ஆ1 வில்லங்கச்சான்றில் விவரம் உள்ளது என்றால் சரிதான். சுந்தரம் பைனான்ஸில் ஆவணங்களை அடமானம் வைத்ததை மீட்டு அதன்பிறகு 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு என் தகப்பனார் கிரையம் செய்து கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான்.

2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கினை எதிர்த்து நிரூபணம் செய்ய வேண்டியது என் கடமை தான் என்றால் சரிதான். என் தகப்பனாரிடம் இருந்து பிரதிவாதிகளுக்கு சரியான பிரதிபலனுக்காக கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். யாரையும் மோசடி செய்யும் விதமாக எனது தகப்பனார் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் கிரைய ஆவணம் எழுதவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் கிரையம் கொடுத்த சொத்தின் மீது வில்லங்கம் ஏற்பட்டால் நான் தான் தீர்த்து வைக்க வேண்டும் என்றால் நீதிமன்ற உத்தரவின் பேரில் செயல்படுகிறேன்.